இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 12-07-2025

# மாட்டிக்கொண்ட பழனிசாமி!

**“கோவில் சொத்தை எடுத்து கல்லூரிகள் தொடங்கலாமா?” என்று கேட்ட பழனிசாமி, இப்போது ‘பல்டி’ அடித்து வேறு மாதிரியாகச் சொல்லி இருக்கிறார். குட்டிக் கரணங்கள் போடுவதும், தரையில் புரள்வதும் அவரது வாடிக்கை தானே?**

‘கோவில்களை விட்டு, அரசாங்கமே வெளியேறு’ என்பதுதான் மதுரையில் நடைபெற்ற ஒரு மாநாட்டின் முக்கியத் தீர்மானங்களில் ஒன்று. அந்த மாநாட்டுக்குத்தான் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஆர்.பி. உதயகுமார், செல்லூர் ராஜு, கடம்பூர் ராஜு, ராஜேந்திர பாலாஜி ஆகிய நால்வரையும் அனுப்பி தனது ஆதரவை வெளிப்படுத்தினார் பழனிசாமி. அந்த மாநாட்டில்தான் தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் கொச்சைப்படுத்திக் காட்சிகள் வெளியிட்டார்கள். ‘போலி திராவிடம்’ என்று அந்த மாநாட்டில் சொல்லப்பட்டது. அதை ஜடம் போல உட்கார்ந்து பார்த்துவிட்டு வந்தார்கள் இந்த கொள்கைப் போலிகள். இது அம்பலம் ஆனதும், ‘அண்ணாவை நான் விட்டுத் தர மாட்டேன்’ என்று கொதித்தார் பழனிசாமி. அது ‘வெறும் நடிப்பு’ என்பதைத்தான் இப்போது உணர்த்தி வருகிறார்.

மதுரை மாநாட்டில் சொல்லப்பட்ட கருத்தைத்தான் பழனிசாமி சொன்னார். இதோ பழனிசாமி சொல்கிறார்…

“நான் சொல்லக் கூடாது. சொன்னா வேற விதமா ஆயிடும். கண்ணை உறுத்துது. கோயிலைப் பார்த்தாலே கண்ணை உறுத்துது. கோயில்ல இருக்கிற பணத்தை எடுத்து கல்லூரி கட்டுறாங்க. தெய்வ பக்தி உள்ளவங்க உண்டியல்ல பணம் போடுறாங்க. அது அறநிலையத் துறைக்குப் போகுது. கோயிலை விரிவுபடுத்தத் தான் பணம் போடுறீங்க. அந்தப் பணத்தை எடுத்து கல்லூரி கட்டுறாங்க. மக்கள் இதை சதிச் செயலாகப் பார்க்கிறார்கள்” என்றுதான் பழனிசாமி பேசினார்.

‘இது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குரல்’ என்று அம்பலம் ஆனதும், இப்போது, ‘அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’ என்று மழுப்புகிறார் பழனிசாமி. “கல்லூரிகள் தொடங்குவதில் மாற்றுக் கருத்து இல்லை. இந்து சமய அறநிலையத் துறை நிதியில் இருந்து தொடங்குவதைத்தான் வேண்டாம் என்கிறோம். இந்த மாணவர்களுக்கு முழுமையாக எந்தவித நன்மையும் செய்ய முடியாது. நான் கூறிய கருத்தைத் திரித்துப் பிரச்சாரம் செய்கிறார்கள்” என்கிறார் பழனிசாமி.

**கோவில் பணத்தை எடுத்து கல்லூரிகள் தொடங்குவது ஏன் என்று கேட்ட ‘சங்கி’ பழனிசாமி, ‘கல்லூரியை வளர்க்க நிதி இருக்காது’ என்று இப்போது திரித்துச் சொல்கிறார். இருப்பினும், ‘இந்து சமய அறநிலையத் துறை நிதியில் இருந்து கல்லூரி தொடங்கக் கூடாது’ என்ற தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார் பழனிசாமி. அதாவது, அவர் முழுச் சங்கியாகவே மாறிவிட்டதையே இந்த மழுப்பலும் காட்டிக் கொடுத்துவிட்டது.**

**இது பேரறிஞர் அண்ணாவுக்குச் செய்யும் துரோகம் ஆகும். தனது கட்சியின் பெயரில் இருக்கும் அண்ணா என்ற பெயரையும், கொடியில் இருக்கும் அண்ணா படத்தையும் பழனிசாமி நீக்கிய பிறகு எதையும் பேசட்டும்.**

- ★ **அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல் மாவட்டம் - இது 1963ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.**
- ★ **ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம் - இது 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.**
- ★ **ஸ்ரீ தேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் - இது 1963 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.**
- ★ **பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம் - இது 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.**
- ★ **அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழநி, திண்டுக்கல் மாவட்டம் - இது 1970ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.**

இந்த வரிசையில்தான் 2021இல் அருள்மிகு கபாலீஸ்வரர் கல்லூரி திறக்கப்பட்டது, முழுக்க முழுக்க கபாலீஸ்வரர் கோவில் நிதி மற்றும் அறநிலையத்துறை நிதியின் கீழ் இக்கல்லூரி செயல்படுகிறது. கழக ஆட்சிக்கு முன்பே இது போன்ற முயற்சிகள் தொடங்கப்பட்டு விட்டன. இதில் என்ன குறை காண்கிறார் பழனிசாமி?

எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் பாலிடெக்னிக் கல்லூரியை 1981ஆம் ஆண்டு உருவாக்கினார். அடுத்த ஆண்டே பெண்கள் பாலிடெக்னிக் தொடங்கினார். இவை இரண்டையும் ஒரே பாலிடெக்னிக்காக 2003ஆம் ஆண்டு ஆக்கினார் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா. எம்.ஜி.ஆர். செய்ததும், ஜெயலலிதா செய்ததும் பழனிசாமியின் கருத்துப்படி சதிச் செயலா? இல்லாவிட்டால் எந்த வசதியும் இல்லாத கல்லூரிகளா?

- ★ **அறநிலையத்துறைக்கு கீழ் இயங்கக்கூடிய கல்வி நிறுவனங்களின் பட்டியல்.**
- ★ **கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள் - 5**
- ★ **தொழில்நுட்ப கல்லூரி - 1**
- ★ **மெட்ரிக் பள்ளி - 1**
- ★ **மேல்நிலைப்பள்ளிகள் - 15**
- ★ **உயர்நிலைப் பள்ளிகள் - 8**
- ★ **நடுநிலைப் பள்ளிகள் - 2**
- ★ **தொடக்கப் பள்ளிகள் - 9**
- ★ **ஒன்றிய அரசு திட்ட மேனிலைப்பள்ளி - 1**
- ★ **இசைப்பள்ளி - 5**
- ★ **வேத ஆகம பாடசாலை - 2**
- ★ **ஓதுவார் பயிற்சிப்பள்ளி - 2**
- ★ **தேவாரப் பயிற்சிப் பள்ளி - 2**
- ★ **காது கேளாதோர், பேச இயலாதோர் பள்ளி - 1**

மொத்தம் 54 பள்ளி, கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் பழனிசாமிக்கு என்ன பிரச்சினை வந்தது? பழனிசாமி கண்ணை எது உறுத்துகிறது? ஏழை எளிய மக்களை படிக்க வைக்கக் கூடாது என்று சொல்கிறாரா பழனிசாமி?

**கோவில்கள் சீராக பராமரிக்கப்படுவது ஒரு தரப்பினருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள், ‘கோவிலை மீட்போம்’ என்று கிளம்பி இருக்கிறார்கள். அந்தக் கும்பலின் குரலை பழனிசாமி எதிரொலிக்கத்தான் பயணம் கிளம்பி இருக்கிறார் என்பது மீண்டும் உறுதியாகி இருக்கிறது.**

● ●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) சென்னையில் நடைபெற்ற உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் மகள் எஸ். தீப்தா – ஈ. சிவபிரதீப் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களிடம் வழங்கினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.07.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் “உலகப் பொதுமறை திருக்குறள்” (TIRUKKURAL Treasure of Universal Wisdom) என்னும் நூலினை வெளியிட்டார். இந்நூலினை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ், சிகாகோ உலகத் தமிழ் மொழி அறக்கட்டளையுடன் சேர்ந்து கூட்டு வெளியீடாக வெளியிடுகிறது. இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் எஸ். கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சிதம்பரம் வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## கடலூர் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*கடலூர், ஜுலை 12 -* கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 09.07.2025, புதன் கிழமை, மாலை 4 மணியளவில், காட்டுமன்னார்கோயில், பெருந்தலைவர் எம்.ஆர். கே. கலையரங்கத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர்கள் ஏ.அங்கையற்கண்ணி, விஜயன்ராம கிருஷ்ணன், சுவை. சுரேஷ், எம்.எம்.சிவா, அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், ஜுலை 14 மற்றும் 15ஆம் தேதிகளில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ஐயா எல்.இளையபெருமாள் நாற்றாண்டு அரங்கம் மற்றும் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை துவக்கி வைப்பதற்கு, வருகை தரும் முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களுக்கு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்க வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதி, 1284 பூத்களில் “ஓரணியில் தமிழ்நாடு” என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமல்படுத்தும் விதமாக இல்லங்கள் தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொதுமக்களை சந்தித்து, கழகத்தில் 60 சதவீதம் புதிய உறுப்பினர்களை சேர்த்திடல் வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், திருமுட்டம் கிழக்கு தங்க. ஆனந்தன், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர். நாராயணசாமி, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர்,

கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிர மணியன், கடலூர் தெற்கு ஆர். விஜயசுந்தரம்,



குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம. சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை மேற்கு எம்.மனோகரன், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே. ஆர்.கோவிந்தராஜ், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேலு, கீரப்பாளையம் மத்திய வி.பி. பாலு, கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் மத்திய கே.மகேஷ், காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டியன்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த. தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், கிள்ளை இரவிச்சந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாணசுந்தரம், என்.டி. கணேசன், மஞ்சு, பா. கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், சேத்தியாதோப்பு ப.மனோகரன், அண்ணாமலை நகர் க. பழனி, மாவட்ட கழக பார்வையாளர்கள் டி.பழனிசாமி, ஜி.சின்னமணி, பி. வெங்கடாஜலபதி,

மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன்,

மாணவரணி அப்பு ஆர். சத்திய நாராயணன், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன். பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி. அருள்ஜோதி,

மாநகர வழக்கறிஞர் அணி பாபு, ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், இலக்கிய அணி வி.சி.சண்முகம், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தக ரணி ஆர்.ரெங்கநாதன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, இலக்கிய அணி பழனிசாமி, டி.வெங்கடாஜலபதி, கலை இலக்கிய பிரிவு, ஜி.சின்னமணி, இளைஞரணி துணை அமைப்பாளர் மணிகண்ணன், முத்துகுமார், குட்டிமணி,பிரபு, தகவல் தொழில்நுட்ப அணி அ.முத்தமிழ்ச்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார், உமாபாலன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.